02.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கரும்பில் புழுத் தாக்குதல்: கட்டுப்படுத்த வழிமுறைகள்

கரும்புப் பயிரில் காணப்படும் புழுக் தாக்குதலை கட்டுப்படுத்த அதற்கான வழிமுறைகளை நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி பாரி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து, அந்நிறுவனத்தின் தலைவர் பாலாஜி, துணைப் பொதுமேலாளர் இளங்கோவன், விரிவாக்கத்துறை மேலாளர் ஸ்ரீதர் ஆகியோர் வெளியிட்ட அறிக்கை:

கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக்கு உள்பட்ட பகுதிகளில் அண்மையில் பெய்த மழைக்குப் பிறகு கரும்புப் பயிரில் இடைக்கணு, நுனிக்குருத்து மற்றும் வேர்ப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

இடைக்கணுப்புழு: கரும்பின் கணுயிடைப் பகுதியில் துளைகள் காணப்படும், துளைப்பக்கத்தில் புழுவின் கழிவு வெளித்தள்ளியிருக்கும். தாக்குதலுக்கு உள்ளான கணு சிறுத்து இருக்கும். காற்று வீசினால் உடைந்து போகும். கரும்பு நடவு செய்த 4 முதல் 6 மாதங்கள் வரை, ஜூன் முதல் டிசம்பர் மாதம் வரை இப்புழுத் தாக்குதல் அதிகளவில் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: டிரைக்கோகிரம்மா கைலோனீஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2ஸ்ரீஸ்ரீ என்ற வீதம் நடவு செய்த 4-வது மாதம் முதல் 6-வது மாதம் வரை 15 நாள் இடைவெளியில் 6 முறை கட்ட வேண்டும்.

டெடராஸ்டிக்கஸ் என்ற கூட்டுப்புழு ஒட்டுண்ணியை நடவு செய்த 5, 6 மற்றும் 7-வது மாதங்களில் ஏக்கருக்கு 1,500 குளவி எண்ணிக்கையில் விட வேண்டும். நடவு செய்யப்பட்ட 5 மற்றும் 7-வது மாதங்களில் இருமுறை தோகை உரிப்பதனால் இப்புழுவை வெகுவாக கட்டுப்படுத்த முடியும்.

நுனிக்குருத்து புழு: இளம் பழுப்பு நிற புழுக்கள் இலையின் தடுநரம்பை துளைத்துச் சென்று பின்னர் தண்டின் வளரும் பகுதியை தாக்கும். இதனால், நுனிக்குருத்து காய்ந்து பக்கத்து தோகையில் சிறு சிறு துளைகள் காணப்படும். ஜூன் முதல் டிசம்பர் வரை பாதிப்பு இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்:கரும்பு நட்ட 5 மற்றும் 7-வது மாதங்களில் இருமுறை தோகை உரிப்பதனால் கட்டுப்படுத்த முடியும்.

தண்ணீர் தேங்கும் நிலங்களில் வடிகால் வசதி செய்ய வேண்டும்.
வேர்ப்புழு: வேர்ப்புழு கரும்பின் ஆதார வேர்களையும், மண்ணில் புதைந்துள்ள கணுக்களையும் தாக்கி உண்ணும். கீழ் தோகைகள் மஞ்சளாகி பின்னர் தூர் முழுவதும் காய்ந்து விடும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: கோடை உழவை ஆழமாக உழுது கூட்டுப் புழுக்களை வெளிக்கொண்டுவந்து பறவைகளுக்கு உணவாக்கலாம். உயிரியல் முறையாக பிவேரியா பேசியானா அல்லது மெட்டாரைசியம் அனிசோப்பிலியே எனும் பூஞ்சாணத்தை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் தொழு உரத்துடன் கலந்து நடவு செய்ய வேண்டும்.
மேற்குறிப்பிட்ட டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி மற்றும் டெட்ராஸ்டிக்ஸ் குளவியை ஈ.ஐ.டி பாரியின் கரும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்து துறை மூலமாக விவசாயிகளின் தேவைக்கு வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் கோட்ட கரும்பு அலுவலர் மற்றும் உதவி ஆய்வாளரை அணுகும்படி தெரிவித்துள்ளனர்.

## கம்புதான் நல்லது

உலக அளவில் பல வகையான உணவு தானியங்கள் இருந்தாலும், அவற்றில் நம் உடலுக்குத் தேவையான அதிகபட்ச கலோரியை தரவல்லது மில்லட் எனப்படும் கம்பு மட்டுமே (100 கிராமில் 378 கலோரி). மிகக் குறைவான கலோரியைக் கொண்டது அரிசி (130 கலோரி). கோதுமையில் உள்ளது 339 கலோரி.

கார்போஹைட்ரேட், அதிகபட்சமாக மக்காச்சோளத்தில் (100 கிராமில்) 74 கிராமும், குறைந்தபட்சமாக ஓட்ஸில் 12 கிராமும் உள்ளது. கம்பில் 73, கோதுமையில் 71, அரிசியில் 28 கிராம் என்ற அளவில் உள்ளது.

புரதச்சத்து, கோதுமையில் 14, கம்பில் 11, அரிசியில் 2.7 கிராம் உள்ளது. இரும்புச்சத்து, கோதுமையில் 19, கம்பில் 16, அரிசியில் 1 சதவீதம் உள்ளது. அதிக சர்க்கரை உள்ளது கோதுமைதான் (100 கிராமுக்கு 2 கிராம்). கம்பில் 1.66, மக்காச்சோளத்தில் 0.6, அரிசியில் 0.1 கிராம் உள்ளது.

சத்து நிறைந்த கோதுமை மூன்று பகுதிகளைக் கொண்டது. எண்டோஸ்பெர்ம், பிரான், ஜெர்ம். கோதுமையை சுத்திகரிக்கும் போது (பிலீச் செய்தல்) பிரான், ஜெர்ம் என்ற பகுதிகள் நீக்கப்படுகின்றன. பி விட்டமின்கள், போலிக் அமிலம், கால்சியம், பாஸ்போரஸ், துத்தநாகம், காப்பர், இரும்பு, நார்ச்சத்து உள்ளிட்ட சத்துப் பொருள்களைக் கொண்டவை அவை.

ஆனால், நம்ம ஊர் கம்பில் எந்த பிரச்னையும் கிடையாது. ஆங்கிலத்தில் மில்லட் என அழைக்கப்படும் கம்பில் பல வகைகள் உள்ளன. கிரேட் மில்லட் (சோளம்), பியர்ல் மில்லட் (கம்பு), பிங்கர் மில்லட் (கேழ்வரகு), பாக்ஸ்டைல் மில்லட் (தினை), லிட்டில் மில்லட் (சாமை), கோடோ மில்லட் (வரகு), காமன்மில்லட் (பனி வரகு), பார்ன்யார்ட் மில்லட் (குதிரைவாலி).

இந்த கம்பு வகைகளில் மிக முக்கிய ஊட்டச்சத்துகளான காப்பர், மாங்கனீசு, பாஸ்போரஸ், மெக்னீசியம் அதிக அளவில் உள்ளன. இதிலுள்ள மெக்னீசியம் இருதய ஆரோக்கியத்துக்கு சிறந்தது என்பதால், மாரடைப்பு ஏற்படுவதை தடுப்பதோடு, ஆஸ்துமா நோய் உள்ளவர்களுக்கு அதன் வீரியத்தை குறைக்கச் செய்கிறது.

குறிப்பாக, நீரிழிவு நோயால் ஏற்படும் இருதய நோய், மாரடைப்பையும் தடுக்கிறது. பாஸ்போரஸ் எலும்புக்கு உறுதியை அளிப்பதோடு, உடலின் ஆற்றல் மூலக்கூறு எனப்படும் ஏ.டி.பி. மூலக்கூறு உற்பத்திக்கும், நரம்பு மண்டலங்களின் செயல்பாடுகளுக்கும் உதவுகிறது.

பொதுவாக கம்பில் உள்ள அதிக அளவிலான மெக்னீசியம் 300 வகையான நொதிகளுக்கு (என்சைம்ஸ்) துணை காரணியாக விளங்குகிறது. இந்த நொதிகள் உடலின் குளுகோஸ் பயன்பாட்டிலும், இன்சுலின் சுரத்தலிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இதனால், டைப் 2 நிரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. கம்பில் உள்ள நார்ச்சத்து பெண்களுக்கு ஏற்படும் பித்தப்பை கல், மார்பக புற்றுநோயைத் தடுக்கிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் சத்தான உணவு தானியங்களாகக் கூறப்பட்டுள்ளதில் முதலிடத்தை மக்காச்சோளமும், இரண்டாவது இடத்தை கம்பும் (மில்லட் வகைகள்), மூன்றாவது இடத்தை ஓட்ஸும் பிடித்துள்ளன. நான்காவது இடத்திலேயே கோதுமை உள்ளது.

அரிசி மற்றும் கோதுமைபோல 3 முதல் 5 மடங்கு சத்தானது கம்பு வகைகள். கம்பு பயிரிடுவது உயிரினப் பரவலுக்கும், சூழல் மேம்பாட்டுக்கும் உகந்தது. வளமான மண்ணோ, அதிக தண்ணீரோ, வேதியியல் உரங்களோ அவசியம் இல்லை.

இது பூச்சியினங்களைக் கவராத பயிர் என்பதால், நோய்த் தொல்லையும், அதைத்தடுப்பதற்கான விஷங்களைத் தெளிக்க வேண்டிய கட்டாயமும் இல்லை.

ஆனால், ஒரு கிலோ நெல்லை விளைவிக்க 4000 லிட்டர் தண்ணீர் தேவை. தண்ணீர் தேங்கும் நெல் வயல்களில் இருந்து வெளியேறும் பசுமை இல்ல வாயுவான மீத்தேன் வாயு நம் சுற்றுச்சூழலுக்கு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது.

பசுமை புரட்சி காட்டிய அரிசி, கோதுமை இரண்டும் கம்பின் இடத்தை ஆக்கிரமித்துவிட்டன.

1971-ல் 18.41 மில்லியன் டன்னாக இருந்த கம்பு உற்பத்தி, 2006-ல் 17.97 மில்லியன் டன்னாக சுருங்கியது. இதே காலத்தில் 38.09 மில்லியன் டன்னாக இருந்த நெல் உற்பத்தி 85.72 மில்லியன் டன்னாகவும், 18.1 மில்லியன் டன்னாக இருந்த கோதுமை உற்பத்தி 70 மில்லியன் டன்னாகவும் உயர்ந்தது. அதாவது, நெல் 125 சதவீதமும், கோதுமை 285 சதவீதமும் அதிகரித்துள்ளது.

பல நோய்களை ஏற்படுத்தும் குளுடன் மிக்க கோதுமையைதான் நாம் சர்க்கரை நோய்க்கு நல்லது என நினைத்து அதிக அளவில் பயன்படுத்தி வருகிறோம். அதே சமயத்தில், மிகச் சொற்ப அளவில் சத்துகள் உள்ள அரிசியைத்தான் முதலிடத்தில் வைத்து உற்பத்தி செய்துவருகிறோம்.

ஆனால், அனைத்து சத்துக்களையும் அதிக அளவில் கொண்ட, பல நோய்களைத் தடுக்கும் தன்மைகொண்ட, குறிப்பாக நீரிழிவு நோய், மாரடைப்பு, மார்பக

புற்றுநோய் உள்ளிட்டவற்றை தடுக்கவல்ல, சர்க்கரை அளவு குறைந்த, அக்ரிலமைட், குளூடன் நச்சுப் பொருள்கள் இல்லாத, அதிக கலோரி கொண்ட கம்பை உற்பத்தி செய்வதிலும், உணவாகப் பயன்படுத்துவதிலும் நாம் தோற்றிருக்கிறோம்.

எனவே, பொது விநியோகத் திட்டத்தில் கம்பை உடனடியாக சேர்ப்பது, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், மதிய உணவுத் திட்டம், பள்ளி, கல்லூரி மாணவர்கள் நல விடுதி ஆகியவற்றில் கம்பு வகை உணவுகளை அரசு இடம்பெறச் செய்ய வேண்டும்.

கம்பு பயிரிட விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி, அதற்கு முழு ஆதரவு அளிக்க வேண்டும். கம்பை உணவாகப் பயன்படுத்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

செலவு மிக்கதாகவும், பிரச்னைக்குரியதாவும் விவசாயம் மாறிவரும் சூழலில், பஞ்சமில்லாத, சக்திமிக்க வருங்கால சந்ததியை உருவாக்க கம்பு உற்பத்தியையும், பயன்பாட்டையும் நமக்காக நாம் மீட்டெடுப்பது மிக அவசியம். தேநீருக்கு மாற்றாக கம்மங்கூழும் கம்மங்கஞ்சியும் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

## 69,800 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி: ஆட்சியர்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 69,800 கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படும் என ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் 11ஆவது சுற்று கால் மற்றும் வாய்நோய் என்னும் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணி வியாழக்கிழமை (செப்.1)முதல் செப். 21 ஆம் தேதிவரை நடைபெறுகிறது. இப்பணியை நாகர்கோவிலில், கால்நடை அலுவலர்களுக்கு மருந்துகளை வழங்கி மாவட்ட ஆட்சியர் தொடங்கிவைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: கன்னியாகுமரி மாவட்டத்தில் 70,350 கால்நடைகள் உள்ளன. அதில் மூன்று மாதத்துக்கு கீழ் வயதுள்ள கன்றுகள் தவிர மீதமுள்ள 69,800 தகுதி வாய்ந்த கால்நடைகளுக்கு கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி போட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 21 நாள்களும் காலை 6

மணிமுதல் 10 மணிவரையும், மாலை 3 மணிமுதல் 5 மணிவரையும் நடைபெறுகிறது.

இந்நோய் பெரும்பாலும் கலப்பின கால்நடைகளில் இரட்டை குளம்புகள் கொண்ட கால்நடைகளை தாக்குகிறது. இந்நோய் தாக்கத்தால் கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைகிறது. இந்நோய் பாதித்த மாடுகளிலிருந்து மற்றமாடுகளுக்கு நேரடியாக தொற்றும் தன்மை கொண்டது. விரைவாக காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. இந்நோயிலிருந்து முற்றிலுமாக கால்நடைகளை பாதுகாப்பதற்கு வரும் செப். 21 ஆம் தேதிவரை 11 ஆவது சுற்று தடுப்பூசி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கால்நடை பராமரிப்புத் துறையினரால் போடப்பட உள்ளது. கால்நடை வளர்ப்போர் இத்தருணத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் பின்டன்மிஸியர், உதவி இயக்குநர்கள் ஜெயபால், ரிச்சர்டுராஜ், தயாசேகர், ஆறுமுகபெருமாள், முருகேசன், கால்நடை உதவி மருத்துவர் சுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் தொடக்கம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் வியாழக்கிழமை தொடங்கியது.

திருநெல்வேலி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மானூர் வட்டத்துக்குள்பட்ட கரம்பை கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மருத்துவ முகாமை தொடக்கிவைத்து ஆட்சியர் மு. கருணாகரன் கூறியது:

கால் மற்றும் வாய் நோயானது பெரும்பாலும் கலப்பின மாடுகளை தாக்கும் வகையில் உள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, இந்த இழப்பை சரி செய்யவும், கால்நடைகளுக்கு நோய் தொற்று வராமல் தடுக்கவும் சிறப்பு முகாம்களை தமிழக அரசு நடத்தி வருகிறது.

இதன்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் 4 மாதங்களுக்கு ஒரு முறை 3 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் மார்ச், செப்டம்பர்

மாதங்களில் 1ஆம் தேதி தொடங்கி 21ஆம் தேதி வரை தடுப்பூசி வழங்கும் பணி நடைபெறும். மாவட்டத்தில் தடுப்பூசி அளிக்கும் பணி இதுவரை 10 சுற்றுகள் நடைபெற்றுள்ளன. இந்த மாதம் 11ஆவது சுற்றுக்கான பணிகள் நடைபெறவுள்ளன.

2 லட்சத்து 85 ஆயிரத்து 722 பசுக்கள், 18,028 எருமைகளுக்கு தடுப்பூசி அளிக்கப்படும். இதற்காக கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் 87 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவர்கள் அனைவரும் தவறாமல் இந்த முகாமில் பங்கேற்று, கால்நடைகளுக்கு தடுப்பூசி அளிக்க வேண்டும் என்றார் அவர்.

கரம்பை கிராமத்தில் நடைபெற்ற முகாமில் 135 பசு, கன்றுகளுக்கு தடுப்பூசி அளிக்கப்பட்டது.

இந்த முகாமில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் வேலாயுதபெருமாள்பிள்ளை, துணை இயக்குநர் ஜோதிராமலிங்கம், வட்டாட்சியர் ஜஸ்டின் ஜெயபால் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மாவட்டத்தில் பரவலாக மழை

கரூர் மாவட்டத்தில் புதன்கிழமை இரவு பெய்த மழையால் விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக இரவு நேரங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. நகரில் புதன்கிழமை இரவு பெய்த மழை விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. உழவர் சந்தை, லைட் ஹவுஸ் கார்னர், திருமாநிலையூர் ஆகிய பகுதிகளில் மழைநீர் ஆங்காங்கே தேங்கியது. மாவட்டத்தில் புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை காலை வரை பெய்த மழையின் அளவு (மி.மீ): அரவக்குறிச்சி - 2.20, குளித்தலை - 1, மாயனூர் - 17, கரூர் - 19.70, அணைப்பாளையம் - 3, தோகைமலை - 5, பஞ்சப்பட்டி - 28, கடவூர் - 7.20, கிருஷ்ணராயபுரம் - 8.40, மைலம்பட்டி - 3 என மொத்தம் 94.50 மி.மீட்டர் மழையளவு பதிவாகியுள்ளது. நிலத்தடிநீர் பாதுகாப்பு

மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க செயலாளர் எம். ராமலிங்கம் கூறுகையில்,இம்மழையை நம்பி நெல்,வாழை பயிரிட முடியாது என்றார்.

## நுண்ணீர் பாசனத்திட்டம் அமைக்க ரூ.5.20 கோடி நிதி ஒதுக்கீடு

கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 1,890 ஏக்கர் பரப்பளவில் 100% மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம் அமைக்க ரூ.5.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடிக்கு நுண்ணீர் பாசன திட்டம் அவசியம். இதில், 60 சதவீதம் வரையில் நீர் சேமிக்கப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் சிறு குறு விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூ.1 லட்சம் வரை நுண்ணீர் பாசன அமைப்புகள் அமைக்க வழங்கப்படுகிறது.

காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை 100% மானியத்தில் இலவசமாக நுண்ணீர் பாசன அமைப்புகளை விவசாயிகள் தங்கள் நிலங்களில் அமைத்துக் கொள்ளலாம்.

இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசு 35 முதல் 45 சதவீதம் வரை மட்டுமே மானியம் வழங்குகிறது. நடப்பாண்டில் தமிழகத்தில் 46,099 ஹெக்டேர் பரப்பிலும், கரூர் மாவட்டத்தில் 1,890 ஏக்கர் பரப்பளவில் ரூ.5.20 கோடி மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

நிகழாண்டில் பொது பிரிவில் ரூ.245.56 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு என தனியே ரூ.69.26 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அல்லது வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன் பெறுமாறு ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கும்பகோணத்தில் பருத்தி மறைமுக ஏலம்: குவிண்டால் ரூ. 5,500

கும்பகோணம் கொட்டையூரில் உள்ள வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி மறைமுக ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

ஆவூர், பட்டீஸ்வரம், திருவிடைமருதூர், திருமாந்துறை, இன்னம்பூர், ஆரியப்படையூர், பம்பப்படையூர், துக்காச்சி, திருப்பந்துறை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 150-க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் 250 குவிண்டால் பருத்தியை மறைமுக ஏலத்திற்கு கொண்டுவந்தனர்.

விழுப்புரம், திருப்பூர், கும்பகோணம், செம்பனார்கோயில் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 5-க்கும் அதிகமான பருத்தி வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்று விலையை நிர்ணயம் செய்து கும்பகோணம் வேளாண் விற்பனைக் குழு அலுவலகக் கண்காணிப்பாளர் பிரியாமாலினியிடம் வழங்கினர்.

இதையடுத்து, இந்த வாரத்தில் சராசரியாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 5,500, அதிகபட்ச விலையாக ரூ. 5,893, குறைந்தபட்ச விலையாக ரூ. 4,900 என விலை முடிவானது.

## திருப்பூண்டியில் 105 மி.மீ மழை

நாகை மாவட்டத்தில் கடந்த 4 நாள்களாக பரவலான மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் அதிகளவாக திருப்பூண்டியில் 105 மி.மீ மழை பதிவானது.

செவ்வாய், புதன் ஆகிய 2 நாள்களிலும் மழைச் சீற்றம் அதிகரித்திருந்தது. புதன்கிழமை இரவு நாகை மற்றும் சுற்றுப் பகுதிகளில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பலத்த மழை நீடித்தது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் அவ்வப்போது பலத்த மழையும், லேசான மழையும் பெய்தது.

வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக திருப்பூண்டியில் 105.6 மி.மீ மழை பதிவானது. மற்ற பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்) :

தரங்கம்பாடி - 31. நாகப்பட்டினம்- 24.5. தலைஞாயிறு- 19.2. ஆணைக்காரன்சத்திரம்- 9, சீர்காழி- 8, மணல்மேடு- 7, மயிலாடுதுறை- 4.

## "கோமாரி நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க வேண்டும்'

கோமாரி நோயிலிருந்து கால்நடைகளைப் பாதுகாத்து, கால்நடை வளர்ப்போர் பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் என்று ஆட்சியர் இல.நிர்மல்ராஜ் கூறினார்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அருகே ஆணைக்குப்பம் ஊராட்சியில் வியாழக்கிழமை நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமைத் தொடக்கி வைத்து, மேலும் அவர் பேசியது:

கோமாரி நோய் தடுப்பூசி முகாமின் நோக்கம் ஏழை எளிய விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கக்கூடிய கால்நடைகள் குறிப்பாக மாடுகள், ஆடுகள் போன்ற கால்நடைகளை கோமாரி நோய்தாக்குதலில் இருந்து தடுத்து அவற்றின் மூலம் விவசாயிகளின் வாழ்வாதார இழப்பை தடுத்து, பொருளாதாரத்தை காப்பதாகும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு இருமுறை கோமாரி நோய்த் தடுப்பூசி இலக்கிலுள்ள கால்நடைகளுக்கு செலுத்தப்படுகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் கால்நடைகளில் (பசுவினம் மற்றும் எருமையினம்) ஏற்படும் கால் மற்றும் வாய் நோயைக் கட்டுப்படுத்த 1,99,000 கால்நடைகளுக்குரிய தடுப்பூசி மருந்தை தமிழக அரசு வழங்கியுள்ளது. கால்நடை மருத்துவக்குழுவினர் செப்.1 முதல் 21-ஆம் தேதி வரை கிராமம் வாரியாக காலை 6 முதல் 9 மணி வரையிலும், மாலை 3 முதல் 5 மணி வரையில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்வார்கள்.

மேலும், திருவாரூர் மண்டலத்துக்குள்பட்ட பகுதிகளில் 79,131 பசு மாடுகள், 169 எருமை மாடுகள், மன்னார்குடி மண்டலத்துக்குள்பட்ட பகுதிகளில் 1,01,889 பசு மாடுகள், 1,173 எருமை மாடுகள் என மொத்தம் 1,98,568 கால்நடைகளுக்கு விடுபாடின்றி கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பவர்கள் தங்களிடமுள்ள 4 மாதத்துக்கு மேல் வயதுள்ள கன்றுகளுக்கும், சினைப்பசுக்கள், கறவைப்பசுக்கள், எருமைகள் மற்றும்

எருதுகளுக்கும் தடுப்பூசி போட்டு, நோயினால் ஏற்படும் பொருளாதார இழப்பைத் தவிர்த்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது என்றார் ஆட்சியர்.

## செப்.6-இல் வெங்காய சாகுபடி இலவசப் பயிற்சி

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வெங்காய சாகுபடி குறித்த இலவசப் பயிற்சி வரும் 6-ஆம் தேதி நடைபெறவுள்ளது.
இதுகுறித்து அதன் தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக் குறிப்பு:
நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 6-ஆம் தேதி காலை 9 மணிக்கு பெல்லாரி, சின்ன வெங்காயம் சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி நடைபெறவுள்ளது.

பயிற்சி முகாமில் சின்ன வெங்காயத்தில் உள்ள உயர் ரகங்கள், சின்ன வெங்காயம், பெரிய வெங்காய நாற்று உற்பத்தி, நாற்றங்கால் மேலாண்மை, நடவு வயல் தயாரிப்பு, சொட்டு நீர்ப்பாசனம், உர நிர்வாகம், களை நிர்வாகம், பூச்சி, நோய் நிர்வாக முறைகள், சேமிப்பு முறைகள் குறித்த அனைத்துத் தொழில்நுட்பங்களும் விரிவாகக் கற்றுத் தரப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266650 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 5-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## பரமத்திவேலூர் விற்பனைக் கூடத்தில் கொப்பரைத் தேங்காய் விலை சரிவு

பரமத்திவேலூர் வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் கொப்பரைத் தேங்காய் குறைந்த விலைக்கு ஏலம் போனது.

சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம்,

பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளிலிருந்து கொப்பரைத் தேங்காயை பரமத்தி வேலூர், வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு விவசாயிகள் வாரந்தோறும் வியாழக்கிழமை கொண்டு வந்து விற்பனைச் செய்கின்றனர். கடந்த வாரம் அரசு விடுமுறையால் ஏலம் நடைபெறவில்லை.

கடந்த மாதம் 18-ஆம் தேதி நடைபெற்ற ஏலத்துக்கு 4,471 கிலோ கொப்பரைத் தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ. 60.10-க்கும், குறைந்தபட்சமாக ரூ.56.10-க்கும், சராசரியாக ரூ. 58.45-க்கும் ஏலம் போனது. நிகழ்வாரம் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 5,544 கிலோ கொப்பரைத் தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஏலத்தில் கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ. 55.19-க்கும், குறைந்தபட்சமாக ரூ.51.90-க்கும், சராசரியாக ரூ. 54.19- க்கும் ஏலம் போனது.

மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு 92 ஆயிரத்து 732-க்கு ஏலம் போனது. கொப்பரைத் தேங்காயின் வரத்து அதிகரித்திருந்ததாலும், வியாபாரிகள் குறைந்த அளவே வந்திருந்ததாலும் குறைந்த விலைக்கு ஏலம் போனதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கொல்லிமலை மிளகு கொடியில் பூக்கள் அதிகரிப்பு: கூடுதல் மகசூல் எதிர்பார்ப்பில் விவசாயிகள்

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் பெய்த தொடர் மழை காரணமாக கொல்லிமலையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மிளகு கொடியில் பூக்கள் அதிகம் முளைத்துள்ளன. இதனால் அடுத்த ஆண்டு அறுவடையின்போது கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் சுமார் 3,000 ஏக்கரில் மிளகு சாகுபடி செய்யப்படுகிறது. வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் குறிப்பிட்ட இடைவெளியில் மழை பெய்து வருமானால், செப்டம்பர் மாதத்தில் நல்ல முறையில் பூப் பிடித்து அடுத்த ஆண்டில் நல்ல விளைச்சல் இருக்கும்.

2015-ஆம் ஆண்டில் ஏப்ரல், மே மாதங்களில் கொல்லிமலையில் போதிய மழை

இல்லை. இதனால் கொடிகளில் பூப் பிடிப்பது குறைந்து, விளைச்சல் பெருமளவில் குறைந்துவிட்டது. சராசரியாக ஒரு சில்வர் ஓக் மரத்தில் ஏற்றிவிடப்படும் ஒரு கொடியில் 2 முதல் 3 கிலோ வரை மிளகு விளைச்சல் இருக்கும். நிகழாண்டு பிப்ரவரி, மார்ச் மாதம் நடந்த அறுவடையில் 1 கிலோ கூடக் கிடைக்கவில்லை. ஏக்கருக்கு 440 சில்வர் ஓக் மரங்களை வைத்து, மிளகு கொடிகளை ஏற்றிவிட முடியும். கொடிக்கு 2 முதல் 3 கிலோ வரை விளைச்சல் இருக்கும். இதன்மூலம் ஏக்கருக்கு 1,000 முதல் 1,200 கிலோ வரை மிளகு கிடைக்கும். கிலோ சராசரியாக ரூ.500-க்கு விற்றாலே ரூ.50,000 முதல் ரூ.60,000 வரை வருவாய் ஈட்ட முடியும். ஆனால், கடந்த பிப்ரவரி, மார்ச் மாதம் நடந்த அறுவடையில் ஏக்கருக்கு 500 கிலோ கூட கிடைக்கவில்லை. இதனால் ஏக்கருக்கு ரூ.30,000-க்கும் குறைவாகவே வருவாய் கிடைத்தது. இதனால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.20,000 முதல் ரூ.30,000 வரை வருவாய் இழப்பு ஏற்பட்டது. போதிய அளவு விளைச்சல் இல்லாமல் போனதால்தான் இப்போது விளைச்சல் பகுதியிலேயே கிலோ ரூ.1,000 வரை விற்கிறது.

இதுகுறித்து தமிழ்நாடு பழங்குடியினர் நல அமைப்பு மாநிலத் தலைவரான விவசாயி கே. குப்புசாமி கூறியது:

கொல்லிமலை மிளகு அடர்த்தியாகவும், காரமாகவும் இருக்கும். ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படாததும், இங்குள்ள இயற்கைச் சூழலும் மிளகு விளைச்சலுக்கு சாதகமாக உள்ளது. இங்கு விளையும் மிளகு தரமானதாக இருப்பதால், நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது.

இப்போது பூ வைத்துள்ள மிளகு கொடியில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் காய்ப் பிடிக்கத் தொடங்கும். பின் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அறுவடை செய்து விற்பனைக்குக் கொண்டு வரப்படுகிறது.

கடந்த ஆண்டு போதிய மழைப் பொழிவின்மை காரணமாக கடந்த பிப்ரவரி, மார்ச் மாத அறுவடையில் விவசாயிகள் எதிர்பார்த்த அளவுக்கு மிளகு மகசூல் கிடைக்கவில்லை. நிகழாண்டு ஏப்ரல், மே மாதங்களில் போதிய மழைப்பொழிவு இருந்ததால், இப்போது நன்றாக பூப்பிடித்துள்ளது.

கடந்த ஆண்டு எதிர்பார்த்த மகசூல் இல்லாமல் கடும் இழப்பைச் சந்தித்த விவசாயிகள், 2017 ஆம் ஆண்டு அறுவடையில் கூடுதல் மகசூலை எதிர்பார்க்குள்ளனர். தற்போதைய சூழலில் மிளகுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது என்றார்.

## நிகழாண்டில் 2,169 ஏக்கரில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் அமைக்க இலக்கு

நாமக்கல் மாவட்டக்கில் நிகமாண்டில் 2,169 ஏக்கரில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறிக்கு மாவட்ட ஆட்சியர் மு.ஆசியா மரியம் வெளியிட்ட செய்தி: குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடி செய்திட நுண்ணீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை நீர்வளம் குறைந்து கொண்டே வரும் இந்த சூழலில், இத்திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் நீர் சேமிக்கப்படுகிறது. எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் தமிழகத்தில் மட்டும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் ஹெக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகளுக்கு காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமாக நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை அமைத்துக் கொள்ளலாம். இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு சிறு,குறு விவசாயிகளுக்கு 35 சதவீதம் முதல் 45 சதவீதம்வரை மட்டுமே மானியம் வழங்கியபோதிலும், தமிழக அரசால் 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நிதழாண்டில் தமிழகத்தில் 46,099 ஹெக்டேர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. பொதுப் பிரிவு விவசாயிகளுக்கு ரூ.245.56 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.69.26 கோடி நிதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது நாமக்கல் மாவட்டத்தில் 2,169.40 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.15 கோடி மானியத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் குடும்ப அட்டை நகல், அடங்கல், கணிணி சிட்டா, நில வரைபடம்,சிறு, குறு விவசாயிகளாக இருப்பின் அதற்கான வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். மாவட்ட வேளாண் இணை இயக்குநரை 9442135016 என்ற செல்லிடப்பேசி எண்ணிலும், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநரை 9443947278 என்ற செல்லிடப்பேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

## கன மழையால் நிரம்பிய காடையாம்பட்டி கோட்டேரி: விவசாயிகள் மகிழ்ச்சி

ஓமலூர் அருகில் காடையாம்பட்டி அருகே உள்ள கோட்டேரி கன மழை காரணமாக நிரம்பியுள்ளது.

காடையாம்பட்டி பகுதியில் 250 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோட்டேரி உள்ளது. கடந்த ஒரு மாதக்துக்கு முன்பு ஏற்காடு சேர்வராயன் மலையில் பெய்த பலத்த மழையினால் டேனிஷ்பேட்டை வழியாக வரும் மேற்கு சரபங்கா ஆற்றில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்தப் பலத்த மழைக்கு டேனிஷ்பேட்டை ஏரி நிரம்பியது.

இதேபோல, 250 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோட்டேரி, குள்ளமுடையான ஏரியும் நிரம்பி, உபரி நீர் வெளியேறும் அளவுக்கு ஆற்றில் வெள்ளம் வந்தது. ஆனால் சில நாள்களில் சரபங்கா ஆற்றில் நீர் வரத்து குறைந்ததால் டேனிஷ்பேட்டை ஏரியில் நீர்மட்டம் குறைந்தது. அதேபோல, கோட்டேரியிலும் நீர் வரத்து குறைந்ததால் ஏரி நிரம்பாமால் அப்படியே நின்று விட்டது. இந்தநிலையில், கடந்த இருநாள்களாக சேர்வராயன் மலைப் பகுதியில் பெய்த மழையால் சரபங்கா ஆற்றில் கண்ணீர் கூடுதலாக வந்தது. இந்நிலையில், வியாழக்கிழமை அதிகாலை கோட்டேரி நிரம்பி உபரிநீர் வெளியேறி பண்ணப்பட்டி ஏரிக்கு சென்று வருகிறது. ஏரியின் முழு கொள்ளளவும் நிரம்பி உபரி நீர் வெளியேறி வருவதால் ஏரி பார்ப்பதற்கு கடல்போல் ரம்மியமாக உள்ளது. இதனை அப்பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் வந்து பார்த்து செல்கின்றனர்.கோட்டேரி நிரம்பியதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து நெல் நடவு நாற்று விடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 73.37 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 73.37 அடியாக உயர்ந்தது.

காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பருவ மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சீராக உள்ளது. அதனால் புதன்கிழமை காலை 72.82 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 73.37 அடியாக உயர்ந்தது. அணைக்கு நொடிக்கு 7,153 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,250 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 35.66 டி.எம்.சியாக இருந்தது.

## கோபியில் பயிராய்வுக் கூட்டம்

கோபி வருவாய்த் துறை சார்பில் கோபி வட்டாட்சியர் அலுவலகத்தில் பயிராய்வுக் கூட்டம் வட்டாட்சியர் குமரேசன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில், துணை வட்டாட்சியர்கள் துரைசாமி, வெங்கடேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண் அலுவலர், வருவாய் ஆய்வாளர், தோட்டக்கலைத் துறை, புள்ளியில் துறையினர் கலந்துகொண்டனர்.

இதில், புள்ளியியல் விவரங்கள், வருவாய்த் துறை சார்ந்த ஆவணங்களுக்கு உள்ள வேறுபாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கே.ஆர்.பி., அணையில் உபரி நீர் திறப்பு: பெனுகொண்டாபுரம் ஏரி நிரம்ப வாய்ப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த, கே.ஆர்.பி., அணையில் இருந்து, பாரூர் ஏரிக்கு தண்ணீர் திறந்து விட்ட நிலையில், ஏரி நிரம்பியதால், உபரி நீர் மத்தூர் அடுத்த பெனுகொண்டாபுரம் ஏரிக்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி, கே.ஆர்.பி., அணையின் மொத்த கொள்ளளவு, 52 அடியாகும். இதில், 47 அடி தண்ணீர் தேங்கினால், அணையில் இருந்து இடது மற்றும் வலது புற கால்வாய்களில், பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும். இதன் படி, கடந்த, பத்து நாட்களுக்கு முன், அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. கர்நாடகா நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த தொடர் மழை காரணமாக, அணைக்கு நீர் வரத்து அதிகரித்து, கடந்த, இரண்டு நாட்களுக்கு முன், அணையின் நீர்மட்டம், 50.20 அடியாக உயர்ந்தது. இதனால், அணையில் இருந்து நெடுங்கல் அணைகட்டு வழியாக, பாரூர் ஏரிக்கு வினாடிக்கு, 197 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. நேற்று காலை நிலவரப் படி, அணைக்கு, 196 கன அடிநீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில், பாரூர் ஏரியின் மொத்த கொள்ளளவான, 15.60 அடி நிரம்பியதால், கே.ஆர்.பி., அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர், பாரூர் ஏரியில் இருந்து நேற்று முதல் புளியம்பட்டி மற்றும் போச்சம்பள்ளி ஏரிக்கு திருப்பி விடப்பட்டுள்ளது. இரு ஏரிகளும் நிரம்பி விடும் தருவாயில் உள்ளதால், இன்று (3ம் தேதி) மத்தூர் அடுத்த பெனுகொண்டாபுரம் ஏரிக்கு தண்ணீர் சென்று, அந்த ஏரி நிரம்பும் வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கோமாரி தடுப்பூசி போடும் பணி துவக்கம்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி துவங்கியது. கால்நடை வளர்ப்பில், கோமாரி நோய் என்பது விவசாயிகளுக்கு பெரும் சவாலாகும். கலப்பின மாடுகளை கால் மற்றும் வாய் கோமாரி நோய் அதிகமாக தாக்கி, பொருளாதார மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும். இந்நோயால், கறவை மாட்டில் பால் உற்பத்தி குறையும். சினை பிடிப்பு தடைபடும். எருதுகளின் வேலைத்திறன் குறையும். இளங்கன்றுகளின் இறப்பு சதவீதம் உயரும். எனவே, கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்காமல் இருக்க, கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ஆறு மாதத்துக்கு ஒரு முறை, இலவசமாக அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது. நடப்பாண்டு, நேற்று முதல், 21ம் தேதி வரை தொடர்ச்சியாக, 21 நாட்களுக்கு ஈரோடு மாவட்டக்தில் உள்ள ஒரு மாநகராட்சி, 4 நகராட்சி, 9 தாலுகாவில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகங்கள், கால்நடை பராமரிப்புத்துறை, ஆவின் நிர்வாகம் மூலமும் தடுப்பூசி போடப்படுகிறது. கருங்கல்பாளையம், அந்தியூர், மொடச்சூர் போன்ற கால்நடை சந்தைகளிலும், ஊசி போட்டு வருகின்றனர். மொக்கம், 3,73 லட்சம் கோமாரி நோய் தடுப்பூசி டோஸ்கள் வரவழைக்கப்பட்டுள்ளது.

## தாண்டிக்குடியில் 53 மி.மீ., மழை

காண்டிக்குடி, காண்டிக்குயைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த இரு தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

இப்பகுதியில் சில மாதங்களாக வறண்ட வானிலை நீடித்தது. அவ்வப்போது சாரல் மழை பெய்தது. நேற்று முன்தினம் மதியம் 2 மணிக்கு துவங்கிய மழை இரவு வரை நீடித்தது.

இதில் அதிகபட்சமாக காண்டிக்குடியில் 53 மி.மீ., மழை பதியவானது. நேற்றும் இரண்டு மணி நேரம் கனமழை பெய்தது. தாழ்வான பகுதியில் பயிரிடப்பட்ட பீன்ஸ், சவ்சவ் பயிர்களில் தண்ணீர் தேங்கியது. தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அடுத்து துவங்கவுள்ள பருவமழைக்கு கற்போதே நாற்று நட ஆயத்தமாகி வருகின்றனர். தொடர் மழையால் மலைப்பகுதியில் இதமான சூழலுடன், காற்றில் ஈரப்பதம் அதிகரித்துள்ளது.

## தென்கரை பாசன வாய்க்கால் தூர் வாரியதால் மகிழ்ச்சி

குளித்தலை: குளித்தலை நகர மக்கள் நல வாழ்வு சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்று, தென்கரை பாசன வாய்க்கால் தூர்வாரப்பட்டது.

நகராட்சி வடிகால் கழிவு நீர், தனியார் மருத்துவமனை ஓட்டல்களில் இருந்து வெளியேறும் கழிவுகளை வாய்க்காலில் கொட்டுவதால், தண்ணீரை பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலை இருந்து வந்தது. மேலும், இந்த தண்ணீர் விவசாயத்துக்கும் பயன்படாத நிலையே உள்ளது. குளித்தலை நகர மக்கள் நல வாழ்வு சங்கத்தினர் சார்பில், கடந்த மாதம் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில், தென்கரை பாசன வாய்க்காலில் உள்ள கழிவுகளை நகராட்சி நிர்வாகம் தூர் வார வேண்டும் என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, தென்கரை பாசன வாய்க்காலில், நகராட்சி சுகாதார பணியாளர்கள் பொக்லைன் இயந்திரம் மூலம் கழிவுகளை தூர் வாரினர். சங்க செயலாளர் மாஜி தாசில்தார் கார்த்திகேயன், தலைவர் வக்கீல் சர்தார், சமூக ஆர்வலர்கள் கோபாலதேசிகன், நாராயணன் மற்றும் சங்கத்தினர் நகராட்சி ஆணையாளர் பவுன்ராஜ், ஆர்.டி.ஓ., சக்திவேல் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர்.

## எக்டேருக்கு ரூ. 3.5 லட்சம் லாபம் முருங்கை இலையில் சம்பாதிக்கலாம்: தேனி கருத்தரங்கில் தகவல்

தேனி, “முருங்கை இலை விற்பனை மூலம் எக்டேருக்கு ஆண்டுக்கு மூன்றரை லட்சம் ரூபாய் லாபம் சம்பாதிக்கலாம்,” என, பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பாலமோகன் தெரிவித்தார்.

தேனியில், பெரியகுளம்தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், அரசு தோட்டக்கலைத்துறை சார்பில் காய்கறி சாகுபடி பயிற்சி கருத்தரங்கம் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் மூர்த்தி தலைமை வகித்தார். தோட்டக்கலைக்கல்லூரி ஆராய்ச்சி நிலைய முதல்வர் பாலமோகன் பேசியதாவது: மாவட்டத்தில் 10.109 லட்சம் எக்டேரில் காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது.

ஆண்டுக்கு 2,94,000 டன் காய்கறி உற்பத்தி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் அதிகளவில் 3,300 எக்டேரில் முருங்கை சாகுபடியாகிறது. முருங்கைக்காயை விட அதன் இலையில் அதிக வருமானம் கிடைக்கும். கேரட்டில் உள்ள வைட்டமின் சத்துக்களை விட முருங்கை இலையில் 10 மடங்கு வைட்டமின் சத்து அதிகம். பாலை விட 15 மடங்கு, கால்சியம் சத்து அதிகம் உள்ளது. இரும்பு, புரத சத்துக்கள் இலையில் அதிகம் உள்ளன. எக்டேருக்கு 14டன் பச்சை இலை கிடைக்கும். உலர்ந்த இலை என்றால் 4டன் கிடைக்கும். சராசரியாக கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு எக்டேரில் 5 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கும். இதில் ஒன்றரை லட்சம் ரூபாய் சாகுபடி செலவாகும். விற்பனை மூலம் எக்டேருக்கு ஆண்டுக்கு மூன்றரை லட்சம் ரூபாய் லாபம் பெறலாம். விவசாயிகள் சந்தைக்கு ஏற்ப காய்கறிகளை உற்பத்தி செய்ய வேண்டும். குழுவாக சேர்ந்து சாகுபடி செய்து விலை நிர்ணயம் செய்தால் வியாபாரிகள், விவசாயிகளை ஏமாற்ற முடியாது, என்றார்.

தோட்டக்கலை துணை இயக்குனர் கிஷோர்குமார். காய்கறி துறைத்தலைவர் ஜான்சிராணி உட்பட பல்வேறு துறை பேராசிரியர்கள் பேசினர்.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரித்தது

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்வரத்து, 7,153 கனஅடியிலிருந்து 10,694 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 74.25 அடியாகவும், நீர் இருப்பு 36.46 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,250 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

## விவசாயிகள் நீர்பாசன திட்ட கண்காட்சி

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையம் சார்பில், பிரதம மந்திரி விவசாயிகள் நீர்பாசன திட்டத்தில், நீர் மேலாண்மை கருத்தரங்கு மற்றும் கண்காட்சி, நேற்று காலை நடந்தது. சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்த கருத்தரங்கை, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சவுந்தரராஜன் துவக்கி வைத்து, விவசாயிகள் நீர் மேலாண்

உத்திகளை, கடைபிடிக்க வேண்டிய அவசியம், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம், உர விலை குறைப்பு குறித்து, விளக்கம் அளித்தார். மேலும், வேளாண் இடுபொருட்கள், பயிர் மாதிரிகள், உயிர் உரங்கள், சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசன கருவிகள், துவரை நாற்று நடவு செயல்விளக்கம் மற்றும் வேளாண் திட்டங்கள், கண்காட்சி யில் வைக்கப்பட்டிருந்தன.

## பரமக்குடியில் பலத்த மழை

ராமநாதபுரம், மாவட்டத்தில் பரமக்குடியில் அதிகபட்சமாக 42 மி.மீ., மழை பதிவானது.

நீண்ட நாட்களாக வெயில் வாட்டி வதக்கிய நிலையில், ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பரவலாக பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக பரமக்குடியில் 42 மி.மீ., பதிவானது.மற்ற இடங்களில் பதிவான மழை மி.மீ.,:ராமநாதபுரம் 37.20, கமுதி 21.80, முதுகுளத்துார் 32.80, பாம்பன் 2.70, திருவாடானை 36.20, தொண்டி 12, பள்ளமோர்குளம் 4, ராமேஸ்வரம் 5.20, தங்கச்சிமடம் 4.20, வட்டாணம் 20, தீர்த்தண்டதானம் 23, ஆர்.எஸ்.மங்கலம் 27. மொத்த மழையளவு 270.30 மி.மீ., சராசரி அளவு 16.89 மி.மீ.,

## சொட்டுநீர் பாசனத்துக்கு மானியம் பெற அழைப்பு

நாமக்கல்: 'நாமக்கல் மாவட்டத்தில், சொட்டுநீர் பாசன திட்டத்தில், விவசாயிகள் பயன்பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகலாம்' என, கலெக்டர் ஆசியா மரியம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடி செய்திட சொட்டு நீர் பாசன திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறு குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்தில், சொட்டுநீர் பாசனம் அமைக்க ஹெக்டேர் ஒன்றுக்கு, அதிகபட்சமாக, ஒரு லட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு, காய்கறி பயிர்களுக்கு, 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு, ஐந்து ஏக்கர் வரை, சொட்டுநீர் பாசன அமைப்புகளை அமைத்துக் கொள்ளலாம். இதர விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்தில் திட்டம்

செயல்படுத்தப்படுகிறது. சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், தேவையான ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒகேனக்கல் ஆற்றில் நீர் வரத்து 14,800 கன அடியாக அதிகரிப்பு




ஒகேனக்கல்: ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு வரும் தண்ணீர் அளவு, 14 ஆயிரத்து, 800 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால், தொடர்ந்து, ஏழாவது நாளாக ஆற்றில் பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள, காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால், அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ண ராஜசாகர் உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. அந்த அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று முன்தினம் காலை வினாடிக்கு, 7,500 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை படிப்படியாக உயர்ந்து, 14 ஆயிரத்து, 800 கனஅடியாக அதிகரித்து. இதனால் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. சுற்றுலா பயணிகளின் நலன் கருதி, நேற்று தொடந்து, ஏழாவது நாளாக பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர்: மழை காரணமாக மேட்டூர் அணையின் நீர்வரத்து 7,153 கனஅடியில் இருந்து 10.694 கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டும் 74.25 அடியாகவும், நீர் இருப்பு 36.46 டி.எம்.சி.ஆகவும் உள்ளது.

## ரூ.2.88 கோடிக்கு தேயிலை விற்பனை



கோவை: கோவை தேயிலை வர்த்தக மையத்தில் நடந்த ஏலத்தில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.17 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.95 லட்சம் கிலோ விற்பனையானது. 110 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.100.96. விற்பனை மதிப்பு ரூ.1.97 கோடி. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.27 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. 1 லட்சம் கிலோ விற்பனையானது. 78 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.90.56. விற்பனை மதிப்பு ரூ.91 லட்சம்.

கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.1.20 அதிகரித்துள்ளது. ஏற்றுமதி ரகம் கிலோவுக்கு 37 பைசா குறைந்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.2.88 கோடிக்கு விற்றுள்ளது. 6 வாரத்திற்கு பிறகு தேயிலை விலை கிலோ ரூ.100ஐ தாண்டியுள்ளதால் வர்த்தகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்வு

பரமத்தி வேலூர்: பரமத்தி வேலூரில், வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டத்தில் வெற்றிலை சாகுபடி பிரதானம். கொடிக்கால்களில் பறிக்கப்படும் வெற்றிலையை கட்டுகளாக கட்டி மொத்தமாக எடுத்து வந்து பரமத்தி வேலூரில் உள்ள மண்டிகளில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்து வருகின்றனர். வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் வரும் வியாபாரிகள் வெற்றிலைகளை கொள்முதல் செய்து லாரிகளில் ஏற்றிச்செல்வார்கள். கடந்த வாரம் கற்பூரி வெற்றிலை முதல் ரகம் ரூ.1700க்கும், இரண்டாவது ரகம் ரூ.1500க்கும் ஏலம் போனது. அதேபோல், வெள்ளைக்கொடி முதல்ரகம் ரூ.7000க்கும், இரண்டாவது ரகம் ரூ.6,000க்கும் ஏலம் போனது. இந்த வாரம் கற்பூரி முதல் ரகம் ரூ.2100க்கும், இரண்டாவது ரகம் ரூ.1750க்கும் ஏலம் போனது. வெள்ளைக்கொடி முதல் ரகம் ரூ.7500க்கும், இரண்டாவது ரகம் ரூ.6500க்கும் ஏலம் போனது. திருமண காலங்கள் தொடர்ந்து வருவதால் வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கோமாரி தடுப்பு முகாம் ஆலோசனை கூட்டம்

துறையூர் : கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் உப்பிலியபுரத்தில் நடைபெற்றது.

கால்நடைகளை தாக்கும் கொடிய நோய் தாக்குவதில் இருந்து பாதுகாக்க கால்நடை பராமரிப்புத் துறையினரால் வருடத்திற்கு இரண்டு முறை மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இதுவரை பத்து சுற்றுகள் முடிக்கப்பட்டுள்ளது. வரும் செப்டம்பர் 1ம் தேதி முதல் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் உப்பிலியபுரம் ஊராட்சி

ஒன்றிய கூட்ட அரங்கில் வட்டார வளர்ச்சி அலுவலர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உப்பிலியபுரம் கால்நடை மருந்துவ உதவி மருத்துவர் பெரியசாமி பேசும் போது. பதினோராவது சுற்றினை எவ்வித விடுபாடுமின்றி 100 சதவீத இலக்கினை எட்டிடும் வகையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள வார்டு உறுப்பினர்கள், பால் கறப்பவர்கள், உழவர் மன்றத்தினர், சுய உதவி குழு உறுப்பினர்கள் கொண்டு கூட்டம் நடத்தி முகாம் பற்றிய செய்தியினை கால்நடை உரிமையாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும். தடுப்பூசி போட்டதை ஏற்கனவே கால்நடை பராமரிப்பு துறையினர் வழங்கிய அடையாள அட்டையில் பதியவும் அறிவுறுத்த வேண்டும் என்றார். கூட்டத்தில் ஊராட்சி தலைவர்கள் மற்றும் ஊராட்சி செயலர்கள் கலந்து கொண்டனர்.

**வேளகாநத்தம் குட்டையில் பனைமரங்கள் வளர்ப்பு**

தா.பேட்டை, : முசிறி அருகே வேளகாநத்தம் கிராமத்தில் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் நூறு நாள் வேலைத்திட்ட பணியாளர்கள் இணைந்து அழிந்து வரும் பனைமரங்களை காத்திட 6 ஆயிரம் பனைமர கொட்டைகளை நட்டனர். கடந்த வாரம் திண்ணக்கோணத்தில் சமூக ஆர்வலர் யோகநாதன் பொதுமக்கள் உதவியுடன் 7,500 பனைமர கொட்டைகளை வரத்து வாய்க்கால், குட்டை, ஏரி உள்ளிட்ட பகுதிகளில் விதைத்தார். இதுகுறித்து தினகரனில் செய்தி வெளியாகியிருந்தது. இதனை கண்ட தண்டலைப்புத்தூர் ஊராட்சித்தலைவர் ஆனந்தன், சமூக ஆர்வலர் யோகநாதனை அணுகி தங்களது ஊராட்சி பகுதிகளிலும் பனைமரங்களை வளர்க்க உதவிடுமாறு கேட்டார்.

இதையடுத்து சமூக ஆர்வலர் 2 ஆயிரம் பனம் பழங்களை சேகரித்து தண்டலைப்புத்தூர் ஊராட்சிக்குட்பட்ட சின்ன வேளகாநத்தம் கிராமத்தில் உள்ள குட்டையில் சேர்த்தார். நூறு நாள் வேலைத்திட்ட பணியாளர்கள் பனம்பழத்திலிருந்து சுமார் 6 ஆயிரம் பனங்கொட்டைகளை பிரித்தெடுத்தனர். நேற்று ஊராட்சித்தலைவர் ஆனந்த் தலைமையில் ஒன்றிய கவுன்சிலர் ராமராஜ், தலைமையாசிரியர் சிதம்பரம், ஆசிரியர்கள் கலைச்செல்வி, காந்திமதி, கீதா, முன்னிலையில் பனங்கொட்டை நடும் விழா நடைபெற்றது. அப்போது சின்ன

வேளகாநத்தம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியை சேர்ந்த மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், நூறு நாள் வேலைத்திட்ட பணியாளர்கள் குட்டையின் கரை ஓரங்களிலும், வரத்து வாய்க்கால் ஓரங்களிலும் சுமார் 6 ஆயிரம் பனங்கொட்டைகளை விதைத்தனர்.

## தொடரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

தோகைமலை: கரூர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. தோகைமலை பகுதியில் கடந்த வாரம்வரை வெயில் சுட்டெரித்து வந்தது. போதிய மழையின்றி நிலத்தடி நீர் மட்டம் குறைந்து பல்வேறு கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. மேலும் கிணறுகளில் தண்ணீர் வறண்டு கிணற்று பாசங்களும் அழிந்து வருகிறது. ஆழ் குழாய் கிணறுகள் மூலம் பரவலான இடங்களில் விவசாயம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த மாதம் மழை பெய்ததால் ஆடி பட்டத்தில் மானாவாரி விவசாயிகள் எள், நிலக்கடலை, சோளம் உள்பட பல்வேறு தானியங்களை விதைத்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு சாரலாக தொடங்கிய மழை இரவு 9 மணி வரை தொடர்ந்து பலத்த மழையாக பெய்தது. இதே போன்று நேற்று மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை மழை பெய்தது. 2 வது நாளாக மாலை நேரங்களில் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இதனால் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்த பயிர்கள் செழித்து வளரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மழை அளவு

மாவட்டத்தில் 12 மையங்களில் மழை அளவு கணக்கிடப்படுகிறது. இதில் க.பரமத்தி, பாலவிடுதி மையங்களில் மழை அளவு பதிவாகவில்லை. மற்ற மையங்களில் நேற்று பதிவான மழை அளவு: மி.மீ. அரவக்குறிச்சி 2.20, குளித்தலை 1, மாயனூர் 17, கரூர் 19.70. அணைப்பாளையம் 3, தோகமலை 5, பஞ்சப்பட்டி 28, கடவூர் 7.20, கிருஷ்ணராயபுரம் 8.40, மயிலம்பட்டி 3. மொத்தம

94.50 சராசரி 7.88. பஞ்சப்பட்டியில் அதிக அளவு மழை பெய்துள்ளது நேற்று பகலில் வழக்கம் போல வெயில் வாட்டி எடுத்தது.

## மழையை பயன்படுத்தி நேரடி நெல் விதைப்பு செய்யலாம் வேளாண் வல்லுனர்கள் ஆலோசனை

தஞ்சை, :தஞ்சாவூர் மாவட்ட மூத்த வேளாண் வல்லுனர்கள் கலைவாணன், பழனியப்பன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை:காவிரிப் படுகையில் தற்போது சம்பா நெல் சாகுபடி பருவமாகும். வட கிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன் அக்டோபர் 25ம் தேதிக்குள் சம்பா நெல் பயிர் வளர்ச்சி நிலையில் இருந்தால் தான் வெள்ள சேதத்திலிருந்து பயிர்களை காப்பாற்ற முடியும். தற்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பை கொண்டும், வந்து கொண்டிருக்கிற நீர்வரத்தை கருத்தில் கொண்டும் உடனடியாக மேட்டூர் அணையை திறந்து அனைத்து சம்பா பரப்பிலும் நாற்றுவிட்டு நடவு செய்திட இயலாத நிலை உள்ளது. எனவே மேட்டூர் அணை நீரை சம்பா பருவ இறுதியில் மழை பெய்யாத தருணத்தில் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக சேமித்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே தற்போது பெய்யும் மழையை பயன்படுத்தி நேரடி நெல் விதைப்பு முறையை அனைத்து விவசாயிகளும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். நாம் எதிர்ப்பார்த்ததுபோல் ஆகஸ்ட் இறுதி வாரத்தில் நல்ல மழை பெய்து வருகிறது. இதை பயன்படுத்தி நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பரவலாக வயலை தயார் நிலையில் வைத்திருப்போர் விதைப்பு பணியை தொடங்கியுள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் நேரடி நெல் விதைப்பை செய்துள்ளனர். டிசம்பர் முதல் வாரம் வரை நீண்ட கால ரகங்களை சிஆர் 1009 (சாவித்திரி), ஆடுதுறை 44, ஆடுதுறை 50 ஆகிய ரகங்களையும், டிசம்பர் மாதம் முழுவதும் 135 வயதுடைய மத்திய கால ரகங்களை விதைத்திட வேண்டும். ஒரு சதுர மீட்டரில் 200 விதைகள் முளைக்க ஏக்கருக்கு 8 முதல் 10 கிலோ விதையை பயன்படுத்துவது போதுமானது. நேரடி விதைப்பு திட்டத்தில் தமிழக அரசு அறிவித்துள்ள சம்பா தொகுப்பு திட்ட மானியங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள உடனடியாக நேரடி நெல் விதைப்பில் ஈடுபட வேண்டும் என அறிக்கையில் தெரிவித்துள்ளனர்

**தஞ்சையில் மழை**

தஞ்சை, : தஞ்சை மாவட்டம் முழுவதும் நேற்று மாலை லேசான மழை பெய்தது.தஞ்சை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாலை நேரங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று மாலையும் பரவலாக லேசான மழை பெய்தது. இந்நிலையில் தஞ்சை மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணி வரை பதிவான மழையளவு விவரம் வருமாறு (மி.மீ.): அதிராம்பட்டினம் 15, கும்பகோணம் 7, பாபநாசம் 10, தஞ்சாவூர் 11, திருவையாறு 7, திருக்காட்டுப்பள்ளி 2, வல்லம் 4, கல்லணை 2, அய்யம்பேட்டை 6, திருவிடைமருதூர் 22, மஞ்சலாறு 8, நெய்வாசல் தென்பாதி 20, பூதலூர் 3, வெட்டிகாடு 16, ஈச்சன்விடுதி 51, ஒரத்தநாடு 6, மதுக்கூர் 5, பட்டுக்கோட்டை 8, பேராவூரணி 13, அணைக்கரை 1, குருங்குளம் 2 என மழை பதிவாகியுள்ளது.பாபநாசம்: பாபநாசத்தில் நேற்று முன்தினம் மாலை 7 மணிக்கு துவங்கி ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் கும்பகோணம்- தஞ்சாவூர் மெயின் சாலையில் மழைநீர் ஆறு போல் ஓடியது

**திருத்துறைப்பூண்டி: கொக்கலாடி, விளக்குடி ஆகிய கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

ஊராட்சிகளில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறை மன்னார்குடி கோட்டம் சார்பில் 11வது சுற்று கோமாரி நோய் தடுப்பு முகாம் கொக்கலாடி, விளக்குடி ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்றது. கொக்கலாடியில் நடைபெற்ற முகாமை ஒன்றிய குழு தலைவர் வேதநாயகி சிங்காரவேல் துவக்கி வைத்தார். கால்நடை மருத்துவர் ராமலிங்கம் தலைமையில் உதவி மருத்துவர்கள் சுரேந்தர், காவியா, விஜேந்தர் கொண்ட மருத்துவ குழுவினர் 1,100 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். ஊராட்சி மன்ற தலைவர் சிவசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் கோமாரி தடுப்பூசி முகாம் வருகிற 20ம் தேதி வரை நடைபெறுகிறது.

## நீடாமங்கலம் வேளாண் நிலையத்தில் நெல் விதை நேர்த்தி செயல்முறை விளக்கம்

நீடாமங்கலம்: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன் தலைமையில் விதை நேர்த்தி பற்றிய செயல்முறை விளக்கம் நடந்தது. திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் 4ம் ஆண்டு மாணவிகள், நெற்பயிருக்கான விதை நேர்த்தி பற்றி செயல்முறை விளக்கம் அளித்தனர். விதை நேர்த்திக்கு தேவையான இடுபொருளான சூடோமோனாஸ் மற்றும் உயிர் உரமான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியாவின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.மேலும் அடியுரம், உயிர் உரங்களில் நாற்றங்கால் நனைப்பின் முக்கியத்துவம் பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டது. நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெஸ்டின், வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் காமராஜ், சிவக்குமார், கவிதாஶ்ரீ, ராஜாரமேஷ், மருத்துவர் சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். திருவாருர் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு விதை நேர்த்தி பற்றிய சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

## நாகை மாவட்டத்தில் சம்பா தொகுப்பு திட்டம்: ரூ.18.28 கோடி ஒதுக்கீடு : விவசாயிகள் பயன்பெற அழைப்பு

நாகை: நாகை மாவட்டத்தில் சம்பா தொகுப்பு திட்டம் செயல்படுத்த ரூ.18.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி கலெக்டர் பழனிச்சாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மேட்டூர் அணையில் குறைந்தளவு தண்ணீரே இருப்பதால், நடப்பாண்டு சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே டெல்டா விவசாயிகளின் நலனுக்காக சம்பா தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நாகை மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்ய, உழவு மேற்கொள்ளும் விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.500 வீதம் அவருடைய வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும். இதற்காக மாவட்டத்தில் 1.50 லட்சம் ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்ய ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வேளாண் விரிவாக்க மையத்தில் சான்று பெற்ற நெல் விதை வாங்கும் விவசாயிகளுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படும். மேலும் தனியார் நிறுவனங்களிலோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ

களை கொல்லி மருந்து வாங்கி அதற்கான பட்டியல் உரிய விண்ணப்பத்துடன் வேளாண்மை விரிவாக்க மையங்களில் வழங்கினால், அவருடைய வங்கிக்கணக்கில் ஏக்கருக்கு ரூ.280 பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்படும்.

மேலும் சிங்சல்பேட் உரத்தை தனியார் நிறுவனங்களிலோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ வாங்கி அதற்கான பட்டியலை உரிய விண்ணப்பத்துடன், வேளாண்மை விரிவாக்க மையங்களில் கொடுத்தால் அவருடைய வங்கிக் கணக்கில் ரூ.200 பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்படும். நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு விதைப்பு கருவி மூலம் நெல் விதைப்பு செய்து அதற்கான பட்டியலை உரிய விண்ணப்பத்துடன் கொடுத்தால், அவருடைய வங்கிக்கணக்கில் ஏக்கருக்கு ரூ.600 பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்படும்.

இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிக்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். நடவு இயந்திரத்திற்கான வாடகை பட்டியல், சிட்டா, அடங்கல் நகல், வங்கிகணக்கு புத்தகத்தின் நகல் ஆகியவற்றை தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரிடம் உள்ள முன்னுரிமை பதிவேட்டில் பதிந்தால், ஆய்வு செய்யப்பட்ட பின் அவரின் வங்கிக்கணக்கில் பின்னேற்பு மானியத்தொகை வரவு வைக்கப்படும்.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் பராமரிக்கப்படும் முன்னுரிமை பதிவேட்டில் விவசாயி, அவருக்கு தேவையான இனத்தின் கீழ், அவருடைய பெயர், முகவரி, பரப்பு ஆகிய விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். விவசாயிகள் முன்னுரிமை பதிவேட்டில் தங்களுடைய பெயர் தேவைப்படும் மானியம் உள்ளிட்ட விவரங்களை பதிவு செய்து இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம். சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்த நாகை மாவட்டத்திற்கு ரூ.18.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## மண்ணை மேம்படுத்த பசுந்தாள் உர விதை பெற விவசாயிகளுக்கு அழைப்பு

நாகை: நாகை மாவட்டத்தில் மண்ணின் வளத்தை மேம்படுத்தி மகசூலை அதிகரித்து விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, பசுந்தாள் உரம் விதை விதைத்து மடக்கி உழுது மண்ணின் வளத்தை பெருக்க தேசிய வேளாண். வளர்ச்சி திட்டத்தின் கீழ், 4200 ஹெக்ேடர் பரப்பில் பசுந்தாளுர விதைகளான தக்கைப்பூண்டு விதைப்பு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஹெக்டர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.1500 மானியத்தில் 50 கிலோ பசுந்தாள் உரவிதைகள் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்ேடர் பரப்பிற்கு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பசுந்தாள் உர விதைகளை பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி கைசிட்டா மற்றும் விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேடு எண், ஆதார் எண் உள்ளிட்ட விவரங்களை தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரிடமோ அல்லது தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய வேளாண். உதவி இயக்குனரையோ அணுகி விண்ணப்பத்தை சமர்ப்பித்து பசுந்தாளுர விதைகளை பெற்று பயன்பெற கலெக்டர் பழனிச்சாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

## பயிர்களை அழிக்கும் மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண்துறை ஆலோசனை

பழநி, : நெல், கரும்பு, சிறு தானியங்களைத் தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநி வட்டாரத்தில் நெல், கரும்பு, சிறு தானியங்கள், பருத்திப் பயிர்கள், மற்றும் தோட்டக்கலை பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றன. இப்பயிர்களில் தற்போது மாவுப்பூச்சிகள் தென்படுகின்றன. மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். வயலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கிரிப்டோளமஸ் பொறி வண்டுகளை ஏக்கருக்கு 600 எண்கள் வீதம் பயன்படுத்த வேண்டும். 5% வேப்பங்கொட்டை கரைசலை ஒட்டும் திரவத்துடன் கலந்து பயன்படுத்த வேண்டும். மேலும், ரசாயன மருந்துகளாக புரபனோபஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி, இமிடா குளேபிரிட் 0.5 மில்லி,

தயோ மீத்தாக்சான் ஒரு கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம். மருந்து தெளிக்கும்போது ஒட்டும் திரவத்தைப் பயன்டுத்துவது அவசியம். மருந்தை சுழற்சி முறையில் பயன்டுத்துவதே சிறந்தது. எனத் தெவித்துள்ளனர்.

## நாங்குநேரி யூனியனில் கோமாரி நோய் தடுப்பு முகாம் துவக்கம்

நாங்குநேரி: நாங்குநேரி யூனியனில் வளர்க்கப்படும் கால்நடைகளை கோமாரி நோய்த் தாக்காமல் பாதுகாக்க ஊராட்சி வாரியாக கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடக்கிறது. நேற்று (1ம்தேதி) நாங்குநேரி பேரூராட்சி பகுதியில் துவங்கிய முகாம் இன்றும் நடக்கிறது. தொடர்ந்து 3, 4ம் தேதிகளில் தளபதி சமுத்திரத்திலும், 5,6ம் தேதி மறுகால்குறிச்சியிலும், 7, 8ம் தேதிகளில் பூலத்திலும், 9,11ம் தேதிகளில் ராஜாக்கள்மங்கலம், 12ம் தேதி தோட்டாக்குடியிலும், 13, 14ம் தேதிகளில் அ.சாத்தான்குளத்திலும், 15, 17ம் தேதிகளில் கரந்தாநேரியிலும், 18, 20ம் தேதிகளில் சிங்கநேரியிலும், 21ம் தேதி தெற்கு நாங்குநேரி ஆகிய ஊராட்சிகளில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடக்கிறது.

அப்போது பொதுமக்கள் தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு நாங்குநேரி கால்நடை மருத்துவர் ஆபிரகாம் ஜாப்ரி தெரிவித்துள்ளார்.
நாங்குநேரியில் பேரூராட்சியில் நடந்த கால்நடை மருத்துவ முகாம் துவக்க விழாவில் மாவட்ட கால்நடை உதவி இயக்குநர் குருநாதன், பேரூராட்சி துணைத்தலைவர் சங்கரலிங்கம், முன்னாள் தலைவர் சங்கரன் மற்றும் டிவிஎஸ் தொண்டு நிறுவன ஊழியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு மாணவிகள் பயிற்சி

போடி, : போடியில் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள், விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியளித்து வருகின்றனர். போடியில் குள்ளபுரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் கிராம தங்கல் மற்றும் விவசாய பணி அனுபவ திட்டத்தின் கீழ் இப்பயிற்சியை அளித்து வருகின்றனர். வேளாண்மை உதவி இயக்குநர் ஆறுமுகம் தலைமையில் அணை இயக்குநர் அபிமன்யூ முன்னிலையில் போடி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு இந்த பயிற்சி அளிக்கப்பட்டது. விவசாயத்தில்

தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பலன்கள், அதிக மகசூல், நோய் தன்மை, பயிர்களைத் தாக்கும் நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து மாணவிகள் எடுத்துரைத்தனர். இதனைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு பயிர் நடவுமுறைகள் குறித்து பயிற்சியளித்தனர்.